★ தமிழர் துயரங்களுக்கு விடிவு ஏற்படுமா?

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 30 இதழ் 335
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14 — 01 — 1992

## விடை காணமுடியாத வினா

(லண்டன்)
இலங்கையில் தமிழ் மக்கள் படும் துன்பதுயரங்களுக்கு இந்த ஆண்டிலாவது விடிவு ஏற்படுமா? இன்னமும் விடை கிடைக்காத விடை தெரியாத வினாக்கள் இவை என்று பிபிசி.
(4ம் பக்கம் பார்க்க)

## பதுளையில் தொடரும் பாரிய தேடுதல் வேட்டை

(பதுளை)
பதுளை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொலிஸாரினால் பாரிய தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருவதாக அறி
(4ம் பக்கம் பார்க்க)

## சி. ஐ. டி. அதிகாரிகள் சென்னை விஜயம்

(கொழும்பு)
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடாத்திவரும் இந்திய விசேட புலனாய்வுக் குழுவுடன் கலந்தாலோசிப்பதற்கும், தகவல்களை பரிமாறிக்
(4ம் பக்கம் பார்க்க)

# ஜே. ஆர். அரசியல் மாற்றங்களை உன்னிப்பாக அவதானிக்கிறார்!

(லண்டன்)
இலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது, அரசியலிலிருந்து திரு. ஜெயவர்த்தன ஒதுங்கியிருந்தாலும் அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை அவர் ஆர்வத்துடன் அவதானித்தே வருகின்றார்.
(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கண்ணி இராணுவ அதிகாரி பலி

(திருமலை)
திருமலையில் விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் பலியானார்; மற்றொரு இராணுவசிப்பாய் காயமடைந்துள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்படையிடம் சிக்கி 365 குடும்பங்கள் தவிப்பு

### எழுவைதீவிலிருந்து வந்தவர் தகவல்

(யாழ்ப்பாணம்)
எழுவைதீவில் தற்போது தங்கியிருக்கின்ற 365 குடும்பங்கள் கடற்படையினரின் பிடிக்குள் சிக்கியிருப்பதனால் வாழ முடியாத நிலைக்குள்ளாகியிருப்பதாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் எழுவைதீவிலிருந்து இங்குவந்துள்ள நோயாளியான ராஜப்பு பெனடிற் (54 வயது) என்பவர் தெரிவித்தார்.
(4ம் பக்கம் பார்க்க)

## இம் மாதம் முதல் 100 ரூபா சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)
கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நூறு ரூபா சம்பள உயர்வு இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து கொடுக்கநடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக
4ம் பக்கம் பார்க்க)

## உணவு இன்மையால் நயினையில் பட்டினி அபாயம்

(யாழ்ப்பாணம்)
நயினாதீவுப்பகுதியில் உணவுப்பொருட்கள் இல்லாமையினால் அங்குள்ள மக்கள் பட்டினி அபாயத்தை எதிர்
(4-ம் பக்கம் பார்க்க)

## கடந்த ஆண்டு மட்டும் ஆயிரம் இராணுவம் பலி

(கொழும்பு)
கடந்த ஆண்டு மாத்திரம் ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடனான சண்டையில் பலியானதாக கொழும்பில் ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
சண்டை காரணமாக இறந்த பொதுமக்களின் சரியான விபரம் தெரியாது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

## தீவுப்பகுதி வயல்நிலங்கள் தரிசு நிலங்களாகின்றன

(யாழ்ப்பாணம்)
தீவகப்பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் தரிசு நிலங்களாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
தீவுப்பகுதியை இராணுவத்
(4-ம் பக்கம் பார்க்க)

## அதிரடியை சமாளிக்க தயார் நிலையில் இருக்குமாறு முப்படைகளுக்கு உத்தரவு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் திடீர் அதிரடித் தாக்குதல்களை சமாளிக்க முப்படைகளும் எவ்வேளையும் தயார் நிலையில் இருக்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது.
கரையோர நகர் தாக்குதலையடுத்தே இந்த உத்தரவை கூட்டுப்படைத் தலைமையக அதிகாரி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க பிறப்பித்துள்ளார். [கே]

## இந்திய நாடாளுமன்றுக்கு பலத்த பாதுகாப்பு

(புதுடில்லி)
இந்திய நாடாளுமன்ற கட்டடத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்:
தீவிரவாதிகள் நாடாளுமன்ற கட்டடத்தின் மீது எந்த தாக்குதலையும் மேற்கொள்ளாதவகையில் புதிய பாதுகாப்பு முறை அமையும் என்று
(4-ம் பக்கம் பார்க்க)

## விமான விபத்தில் பாஸ்கரலிங்கம் மயிரிழையில் தப்பினார்

(கொழும்பு)
நிதியமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் விமான விபத்திலிருந்து மயிரிழையில் உயிர்தப்பினார்.
கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து சென்னைக்குச் சென்ற 'ஏயர் லங்கா' விமானம் நடுவானில் தீப்
(4-ம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் மூன்று மின் கோபுரங்களின் திருத்த வேலைகள் பூர்த்தி!

(யாழ்ப்பாணம்)
மாங்குளம் பகுதியில் சேதமடைந்த மின்கோபுரங்களை திருத்தும் வேலைகள் மிக வேகமாக நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.
இராணுவ நடவடிக்கைகளினால் மாங்குளம் பகுதியில் சேதமடைந்த ஆறு மின்கோபுரங்களில் இதுவரை மூன்று மின்கோபுரங்கள் திருத்தம் செய்யப்பட்டு விட்டதாகவும் மற்ற கோபுரங்களை திருத்தும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் இதேவேளையில் கிளிநொச்சி வரையுமுள்ள மி
(4ம் பக்கம் பார்க்க)

★ உள்நாட்டு பிரச்சினைக்கு —

# அரசியல் தீர்வு காண முனையும் போதெல்லாம் அதை எதிர்ப்பவர்க்கு இடம் கொடுக்கப்படுகிறது

## - அமைச்சர் செல்லச்சாமி கூறுகிறார் -

(கொழும்பு)

"இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முற்பட்ட போதெல்லாம் அதை எதிர்க்கும் கோஷ்டிக்கு இடம் கொடுத்ததினாலேயே இன்றைய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் திரு எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்:- சுதந்திரக்கட்சி மாகாணசபையை ஏற்றுக்கொள்ளவில்லை. இனப்பிரச்சினை தொடர்பாக அவர்களது நிலை என்ன? தற்காலிக தீர்வொன்றை புலிகளுக்கு கொடுத்து அவர்களை ஏற்றுக்கொள்ள கோருவது நியாயமல்ல.

தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிவரும் அவர்கள் இப்படியான தீர்வொன்றை எடுத்து அரசாங்கம் மாறும் போது வரும்கட்சி இந்த மாகாணசபை முறையை நிராகரித்தால் என்ன செய்வது என நினைப்பதும் சரியானதே.

69 ஆண்டுகள் கட்டிக் காக்கப்பட்ட சோவியத் யூனியன் இன்றில்லை. இந்தியாவிற்கு என்ன நடக்குமோ என்றநிலை இன்று. இப்படி உலகநாடுகளின் நிலை இருக்கையில் 12 வருடங்களாக தீர்வு காணப்படாதிருக்கும் எமது நாட்டு பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி தெளிவாக எடுத்துக்கூறிவிட்டார். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் நாடு பிளவுபடுவதை தவிர்க்க முடியாதென்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். எனவே இனியும் இப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பின்போடுவது நாட்டுக்கு ஏற்ற நல்ல சகுனமல்ல.

தமிழ்பேசும் சிறுபான்மை இன மக்களின் மொழியுரிமை, குடியுரிமை, பாரம்பரிய வசிப்பிட உரிமை, குடியேற்றம் போன்ற பிரச்சினைகளில் சமாதானத் தீர்வு காணப்படவேண்டுமென்ற அடிப்படையில் செய்துகொள்ளப்பட்ட 'பண்டா-செல்வா' ஒப்பந்தம் 'டட்லி-செல்வா' ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்கள் அற்ப ஆயுளுடன் முறிந்துபோனதால் தமிழ்பேசும் சமூகம் பெரும்பான்மை சமூகத்தை சந்தேகத்துடன் பார்க்கும் நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாகவே சமஷ்டி ஆட்சி, பிராந்திய சுயஆட்சி, பிராந்திய சபைகள், மாவட்ட சபைகள் என்றெல்லாம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இறுதியில் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்ற முறையை கூட்டணியினர் ஏற்றுக்கொண்ட போதிலும் அதற்கான அதிகாரங்களை வழங்குவதில் ஏற்பட்ட இழுபறி காரணமாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் பயனற்றுப்போய்விட்டது.

இரண்டாவது உலக யுத்தம் கூட 4 ஆண்டுகளில் முடிவடைந்துவிட்டது. ஆனால் எமது நாட்டில் உள்நாட்டு யுத்தம் நீடிக்கிறது. நமது மக்களின் உயிர்கள் ஆயிரக்கணக்கில் அழிக்கப்படுகின்றன. அகதிகள் முகாம்கள் அதிகரித்து வருகின்றன. பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினையை முன்வைத்து தேர்தலில் ஆதாயம் தேடும் நிலை இனி ஏற்படக்கூடாது. அதற்கேற்ப இப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும். சரியான ஒரு அரசியல் தீர்வுக்கு அரசியல் கட்சிகளும் அரசாங்கமும் ஒன்றுபடுமாயின் விடுதலைப் புலிகளை இ. தொ. கா. வழிக்கு கொண்டுவரும். அது எங்கள் கடமை அதனை நாம் கட்டாயம் செய்வோம்.

இன்றைய நிலையில் ஆளும் ஐ. தே. கட்சியும் தீர்வுகுறித்து தனது யோசனை என்ன என்பதை தெரிவித்தாக வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ)

## மணலாறு மாவட்டத்தில் பாடசாலைகள் பாதிப்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் ராணுவ தாக்குதல்களாலும், குண்டு வீச்சுத் தாக்குதல்களாலும் பாதிப்படைந்துள்ளன.

ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி பாதிப்படையும் நிலை ஏற்பட்டதால் விடுதலைப் புலிகள் மாணவர்களுக்கு வீடுகளில் வைத்து கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

கொக்கிளாய், கரநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் ராணுவ கட்டுப்பாட்டிலுள்ளது. ஏனைய பகுதிப் பாடசாலைகளிலும் தளபாடங்கள், கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவைகளையும் புனரமைக்க விடுதலைப்புலிகளும் பொதுமக்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

## ரூ.5000 பறிகொடுத்தவருக்கு கிடைத்த பெரும் அதிர்ஷ்டம்

(யாழ்ப்பாணம்)

ஐயாயிரம் ரூபாவை இராணுவத்திடம் பறிகொடுத்த பெண்ணொருவருக்கு பின்பு 15 ஆயிரம்ரூபா கிடைத்தது.

இச்சம்பவம் அண்மையில் வவுனியா தாண்டிக்குளம் இராணுவ தடுப்பு முகாமில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியைச்சேர்ந்த பெண் ஒருவர் கடந்தவாரம் கொழும்பு சென்று திரும்பியபோது வவுனியாவில் உள்ள மேற்படி முகாமில் இராணுவத்தினரின் சோதனைக்குட்பட்டார். இப் பெண்ணின் கைப்பையை சோதனை செய்த இராணுவ சிப்பாய் ஒருவர் அதனுள் இருந்த 5 ஆயிரம் ரூபாவை திருடியதுடன் அப்பெண்ணை சிங்களமொழியால் ஏதையோ கூறி அவ்விடத்திலிருந்து உடனே போகும்படி சைகையால் காட்டி அனுப்பிவிட்டாராம்.

ஆனால் அப்பெண்மணி வேறுஒரு பாதையால் குறிப்பிட்ட இராணுவ சிப்பாயின் கண்ணில் படாமல் இராணுவ பொறுப்பதிகாரியிடம் சென்று தனக்குநேர்ந்த கதியைக் கூறினாராம். உடன் அந்த அதிகாரி சோதனை நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்று சோதனையை சிறிது நேரம் நிறுத்திவிட்டு அங்கு நின்ற இராணுவத்தினர் அனைவரையும் அணிவகுத்து நிற்கும்படி கூறி அப்பெண்ணை பணம் பறித்த இராணுவ சிப்பாயை அடையாளம் காட்டும்படி கூறினாராம். அப்பெண் உடனே அடையாளம் காட்டியதும், இப்பெண்ணின் பணத்தை எடுத்தாயா? என அதிகாரி இராணுவசிப்பாயை மிரட்டியபோது அவர் குற்றத்தை பகிரங்கமாக ஒப்புக்

(4-ம் பக்கம் பார்க்க)

★ உலகில் மீண்டும்

## சோவியத்யூனியனை உருவாக்க ரஷ்ய மக்கள் கோரிக்கை

(மாஸ்கோ)

'சோவியத் யூனியனை' மீண்டும் கட்டியெழுப்புமாறும் கம்யூனிஸத்திற்கு புத்துயிர் அளிக்குமாறும் ஆயிரக்கணக்கான ரஷ்ய மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

ரஷ்யாவில் உணவுப் பொருட்கள் மற்றும் பண்டங்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக மாஸ்கோ உட்பட பல ரஷ்ய நகரங்களில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளது. இதன்போதே மேற்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் ஜெல்ஸின் உடனடியாக ராஜினாமா செய்வதுடன் புதிதாக உருவான சுதந்திர நாடுகளின் 'காமன்வெல்த்' அமைப்பு கலைக்கப்படவேண்டும் எனவும் பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சிவப்பு கொடிகளுடன், லெனினின் படங்களையும் ஏந்திச் சென்றனர். இந்த ஆர்ப்பாட்டம் ரஷ்ய அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## 'அநுரா'விற்கான கட்டணத்தை யார் செலுத்துவார்கள்?

(புதுடில்லி)

புதுடில்லி 'அசோகா ஹோட்டலின்' உணவு விடுதியில் அநுரா பண்டாரநாயக்கா மேற்கொண்ட செலவான 4,266 ரூபா 50 சதத்தை யார் கட்டுவார்கள் என ஹோட்டல் நிர்வாகம் எதிர்பார்த்து நிற்கிறது.

இதுபற்றி தெரியவருவதாவது; ராஜீவ் காந்தியின் மரணச் சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற 'அநுரா' மே 23ம் திகதி முதல் 25ம் திகதிவரை மேற்படி ஹோட்டலில் தங்கியிருந்தார். இதன்போது உணவு விடுதிக்கு இவர் 4,266 ரூபா 50 சதம் கட்டவேண்டிய நிலையேற்பட்டது.

ஆனால் அநுராவோ இதனைக் கட்டாமல் நாடு திரும்பிவிட்டார். சில மாதங்கள் கழித்து ஹோட்டல் நிர்வாகம் இதனைச் செலுத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு 'பில்லை' அனுப்பியது. ஆனால் அதனை செலுத்தாமல் இலங்கை தூதரகத்திற்கு இந்திய வெளியுறவு அமைச்சு அனுப்பியது.

எனினும் இதனை ஏற்க மறுத்த இலங்கை தூதரகம் பணம் செலுத்த மறுத்துவிட்டது. தற்போது இப்பணத்தை யாரிடமிருந்து பெறுவதென தெரியாத நிலையில் ஹோட்டல் நிர்வாகம் இருக்கிறதாம். (ரி)

## திருமலையில் தமிழர் மீது படையினர் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலையில் இறங்கிய இராணுவத்தினர் தமிழ் மக்கள்மீது தாக்குதல் நடத்திவருகின்றனர்.

இம்மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு மேற்கு, கொவிப்பட்டுமேடு, நாயன்மார்திடல், குஞ்சம்பதிடல், கல்விராவை ஆகிய பகுதிகளை இராணுவத்தினர் சுற்றிவளைத்து பலரைக் கைது செய்து துன்புறுத்தியுள்ளனர்.

இதனால் 600க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தம்பலகாமம் பகுதிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலையும் கணேசபுரம், கைமுத்தான், செட்டிகுளவெளி பாலைவனம் ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்துள்ளனர்.

இதன்போது 3 பேர் காயமடைந்தனர். இராணுவத்தினர் 3 பிள்ளையின் தந்தையான முத்துக்குமார் கந்தசாமி (33 வயது) என்பவரைக் கைது செய்து முகாம் கொண்டுசென்றனர்.

## ஆசிரியர்களுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அடுத்த மூன்று வருடகாலத்துக்குள் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை பயிற்றுவிக்கலாமென திட்டமிடக் அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

ஆசிரிய கலாசாலையில் 27,500 பயிற்சிபெற்ற ஆசிரியர்களையும், பட்டதாரியல்லாத ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொலைக் கல்வி நிகழ்ச்சியின் கீழ் 19 ஆயிரம் பேர் பயிற்றுவிக்கப்படுவர். தொலைக்கல்வி விசேட திட்டமொன்றின் கீழ் 35 ஆயிரம் புதிதாகச் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். (150(

## நயினையில் கடற்படை கெடுபிடி அதிகரிப்பு

(புங்குடுதீவு)

நயினாதீவில் இறங்கிய கடற்படையினரின் கெடுபிடிகள் தற்போது அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது. படையினர் ரோந்து செல்கையில் பொதுமக்களை துன்புறுத்துவதுடன் பல மணிநேரங்களுக்கு வெய்யிலில் நிறுத்திவைக்கின்றனராம்.

அத்தோடு ஆத்திரமடையும் போதும், குடிபோதையின் போதும் கண்ணில் அகப்படும் கோட்டில்களைத் தீக்கிரையாக்கல், சைக்கிள்களில் வருவோரைத் தாக்கிவிட்டு சைக்கிள்களைப் பறித்துச்செல்லுதல், காரணமேதுமின்றி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுதல் போன்ற படையினரின் அடாவடித்தனங்களும் இப்பகுதியில் அதிகரித்துவருவதாகத் தெரியவருகிறது. [101]

## முதலுதவி சான்றிதழ்

(மீசாலை)

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு முதலுதவி வகுப்பு 4 மாதங்களாக நடைபெற்று இறுதியில் 35 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக டாக்டர் சுந்தரம் இன்னாசித்தம்பி கலந்துகொண்டு சான்றிதழ்கள் வழங்கினார்.

# கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர்களி னால் கொழும்புவைத்தியசாலை சென்று சிகிச்சை பெறுவதற் காக சிபார்சு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட நோயா ளர்களையும் அவர்களை அழைத் துச் செல்லும் உறவினர்களை யும் நாளைமறுதினம் 16ம்திகதி யாழ். போதனாவைத்தியசாலை யில் காலை 7 மணிக்கு சமூகம் கொடுக்கும்படி கேட்கப்பட் டுள்ளனர்.

16-ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து புறப் படும் குமுதினிக் கப்பலில் சுமார் 40 நோயாளர் வரையில் கொழும்பு செல்ல உள்ளனர். (56)

# அனலைதீவுப்பகுதியில் அரச ஊழியர்க்கு சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

அனலைதீவுப்பகுதியில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் இது வரையில் வழங்கப்படவில்லை. இந்தப்பகுதியை படையினர் ஆக்கிரமித்ததையடுத்து அரச ஊழியர்களின் 4 மாதச் சம்ப ளங்கள் இதுவரை கிடைக்க வில்லை என அங்கிருந்து வந்த அரச ஊழியரான சின்னத் தம்பி இரவீந்திரன் தெரிவித் தார்.

அங்குள்ள ஓய்வூதியர்களுக்கு மட்டும் 4 மாதத்திற்குரிய பணமாக 4000 ரூபா வழங்கப் பட்டதாக அங்கிருந்து வந்த ஓய்வூதியரான மருதனார் சபாரட்ணம் (61 வயது) தெரி வித்தார்.

அரச ஊழியர்கள் படையின ரிடம் முறையிட்டும் இது விட யத்தில் அவர்கள் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வரு வதாகவும் பணவசதியற்ற நிலை யில் மக்கள் உள்ளதாகத் தெரி வித்தார். (56)

# 3000 அகதிகள் மாத்திரமே இலங்கை திரும்ப விருப்பம்

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங் கைத் தமிழ் அகதிகளில் மிகச் சிறிய தொகையினரே சுய விருப்பத்தின் பேரில் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

சுமார் 2 லட்சம் அக திகளுள் மூவாயிரம்பேர் வரை யில் மாத்திரமே இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித் துள்ளனர்.

இலங்கை திரும்புவது தொடர்பாக பூர்த்தி செய்வ தற்கு அகதிகளுக்கு வழங்கப் படும் விண்ணப்பப்படிவங்கள் ஆங்கிலத்திலேயே வழங்கப் படுகின்றன.

இதனால் பெரும்பாலான அகதிகள் தாம் எதற்காகக் கையெழுத்து வைக்கிறோம் எனத் தெரியாமல் அதில் கையெழுத்திடுகின்றனர்.

பலர் அதில் கையெழுத்து வைக்கும்படி அதிகாரிகளால் பலவந்தப் படுத்தப்படுகின்ற னர்.

படிவத்தில் கையெழுத் திடாதபோதும் வழங்கப் படும் நிவாரணங்கள் நிறுத் தப் நிறுத்தப்படும் என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு ஒருபகுதி அகதிகளிடமிருந்து கையெழுத்து பெறப்படுகிறது.

தற்போது அகதிகளை இலங் கைக்குத் திருப்பி அனுப்பு வது உகந்த நேரமாகாது. பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க் கப்பட்டு நிலைமை வழமைக் குத் திரும்பும் பட்சத்திலேயே அகதிகள் அனைவரும் இலங் கைக்கு திருப்பி அனுப்பப் படவேண்டும் என அகதிகள் நலன் பேணும் அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

## அம்பாறையில் 35 பேர் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் ராணுவத்தினர் நடத்திய சோதனை நடவடிக்கையில் 35 பேர்கைது செய்யப்பட்டு விசா ரணைக்காக முகாம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கைதான அனைவரும் தற் பொழுது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கடவுச்சீட்டு விண்ணப்ப படிவங்கள்

(மானிப்பாய்)

கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகத் திலிருந்து பிரிவுச் செயலர் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் நன்மை கருதி இப்படிவங்கள் தற் போது கரவெட்டி, பருத்தித் துறை, கோப்பாய், மருதங் கேணி ஆகிய பிரிவுச் செயலர் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து இவ்வா ரம் செயலகத்திற்கு வந்து சேரும் படிவங்களை ஏனைய பிரிவுச் செயலாளர் அலுவல கங்களுக்கும் அனுப்பி வைக் கப்படவுள்ளதாக செயலக உத்தியோகத்தர் ஒருவர் தெரி வித்துள்ளார். (71)

## தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வி. தெரிவித்தது.

பி.பி.ஸியில் மேலும் தெரி விக்கப்பட்டதாவது;

வடக்கு கிழக்கு மாகாணங் களில் மக்கள் தாங்கொணா இன்னல்களுக்கு ஆளாகியுள் ளார்கள். வடக்கில் உணவு, எரிபொருள், பற்றாக்குறை மின்சக்தி இல்லை, அடிக்கடி குண்டுத் தாக்குதல்கள் என மக்களுக்கு சொல்லொணா துன்பங்கள்.

இதேவேளை மக்கள் இன்று இருக்கிறோம் நாளை இருப் போமா என்ற விரக்தி மனப் பான்மையுடன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு இருக்கின்ற னர். (சே)

## தமிழரின் நிலங்களில் படையினர் பயிர்ச்செய்கை

(மட்டுநகர்)

மட்டுவெல்லாவெளிப் பகுதி யிலுள்ள தமிழருக்குச் சொந்த மான விவசாய நிலங்களில் படையினர் விவசாயச் செய் கையை மேற்கொண்டுள்ள னர்.

இப்பகுதியிலிருந்து தமிழர் களை அடித்து துரத்திவிட்டு அவர்களின் நிலங்களில் பயிர்ச்செய்கையை படை யினர் மேற்கொண்டுள்ளனர்.

## மாங்குளத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்த வேலைகளும் நடை பெற்று வருவதாகவும் கூறப் படுகின்றது.

இவ்வேலைகள் எதுவித தடங் கலுமின்றி நடைபெற்றால் அடுத்த மாதம் நடுப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு முற்றாக மின்சாரம் கிடைத்து விடும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நேற்று தெரி வித்தார். (வி)

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற கட்டடத்தில் அமைந்த வாருள பாதுகாப்பு ஏற்பாடு கள் உட்பட ''எலெக்ரோனிக்'' கருவிகள் பொருத்தப்பட்ட கவர்களும் அமைக்கப்பட வுள்ளதாக பொலிஸ் அதி காரிகள் தெரிவித்தனர். (சே)

## மோதல்

(வவுனியா)

வவுனியா பம்பைமடு, சாஸ் திரி கூழாங்குளத்தில் விடுத லைப் புலிகளுக்கும் இராணு வத்துக்குமிடையில் நேற்று மோதல்கள் நடைபெற்றன.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றி தெரிவிக் கப்படவில்லை.

## விமான விபத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்தபோது திரு. பாஸ்கர லிங்கமும், சில உயரதிகாரிக ளும் உட்பட மொத்தம் 124 பயணிகள் அந்த விமானத்திலி ருந்தார்கள்.

விமானியின் சாதுரியத்தால் விமானம் உடனடியாக சென்னை அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்டது.

இரவு நேரமானதால் விமா னம் தீப்பிடித்து எரிந்து கொண்டு தரை இறங்குவதை பெரும்பாலான மக்கள் அவ தானித்ததாகவும் கூறப்படு கின்றது.

விமானியின் சாதுரியமான துணிச்சலைக்கண்ட திரு. பாஸ் கரலிங்கம்நேரடியாகச்சென்று அவருக்கு தனது பாராட்டு களைத் தெரிவித்தார். (வி)

## தீவுப்பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினர் ஆக்கிரமித்துள்ளதால் தற்போது தீவுப்பகுதியில் தங்கியிருக்கும் விவசாயிகள் தங்கள் காலபோக பயிர்ச்செய் கையைமேற்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர்.

நெற்பயிர்ச்செய்கை மேற் கொள்வதற்கு பணவசதி மூலப்பொருள்கள் உபகரணங் கள், மருந்து வகைகள் போன் றன இல்லாத நிலையில் பயிர்ச் செய்கையை எப்படி மேற் கொள்ள முடியுமென அங்கி ருந்து வந்தவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (56)

# தீவக நோயாளிகள் யாழ். கொண்டுவரப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளிலிருந்து கடுமையா கப் பாதிக்கப்பட்ட பல நோயாளர்கள் கடற்படையி னரால் காங்கேசன்துறை முகத்திற்கு படகு மூலம் அழைத்துவரப்பட்டு அங்கி ருந்து லிவி லிவி கப்பல் மூலமாக பருத்தித்துறைமுகத் துக்கு அனுப்பி வைக்கப்பட் டனர். இவர்களில் மூன்று நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர்.

செல்வி திபாகரி இருநாவுக் கரசு (17 வயது), இராசப்பு பொன்டிற் (மாதகல்) திருலதி பாக்கியம் சபாரட்ணம் (60 வயது அனலைதீவு) ஆகி யோரே தீவுப்பகுதிகளிலி ருந்து அழைத்துவரப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளவர்களாவ வர். (56)

## கூற்பகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுயதேகியாக இருந்தவர்கள் பலர் தற்போது கடும நோயா ளிகளாகி விட்டனர் என்றும் குழந்தைகள் பாலுணவின்றி யும் போசாக்கு உணவின்றி யும் பரிதாபக்காட்சியையே அங்கு காணக்கூடியதாக இருக் கின்றது எனவும் தெரிவித் தார்.

நயினாதீவிலிருந்து ஒருபகுதி உணவு படையினரால் கொண்டுவரப்பட்டு அங் குள்ள மக்களுக்கு மாதத்திற்கு ஒருதடவை ஒருகுடும்பத்திற்கு 3 கிலோ அரிசி அரைக் கிலோ சீனி ஒரு கிலோ மா ஆகியவையே வழங்கப்பட்டு வந்தது. ஒருதடவைவழங் கப்பட்ட உணவுப்பொருள் களிற்குபின்னர் எந்தவிதஉண வுப்பொருள்களும் வழங்கப்பட வில்லை. அங்கு எதுவித உணவு பொருள்களும் இல்லை என் றும் அவர் கூறினார். (56)

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற இத் தாக்குதலில் இராணுவ தரப் பில் ஏற்பட்ட சேத விபரம் பற்றி தெரிவிக்கப்படவில்லை.

## உணவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கியுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

திருகோணமலையிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப் பட்ட உணவு ஒரு தடவை வழங்கியதற்குப்பின்னர் இது வரையும் உணவுப்பொருள் கள் வழங்கப்படவில்லை இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் உணவில்லாத நிலை யிலும் மருந்து வகைகள் இன்றியும் மிகவும் பாதிக்கப் பட்ட நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பட்டினிக்கோலத்தில் மக்கள் அரை வயிற்றுடன் வாழ்ந்து வருகின்றனர்.

நயினாதீவு விவசாயிகள், மீனவர்கள் தொழிலற்ற நிலை யில் பல ஆயிரக்கணக்கான வருமானத்தினை இழந்துள்ள தால் மாற்றுத்தொழில் களின்றி மிகவும் அவலப்பட்ட நிலையில் உள்ளதாகத் தெரி வித்தனர். (56)

## பதுளையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தேடுதல் வேட்டையின் போது பல அப்பாவி மலையக இளைஞர்கள் கைது செய்யப் பட்டுவருவதாக தெரிவிக்கப் படுகிறது.

ஏற்கனவே பலதடவைகள் இப்பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலில் கைதானவர்களில் பலர் இன்னமும் தடுத்து வைக் கப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் தற்போது கைதுசெய்யப் பட்டுவருவது குறிப்பிடத்தக் கது.

## சி. ஐ. டி.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்வதற்காகவும், இலங்கை யின் சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவர் சென்னை சென்றுள்ளார்கள்.

புலனாய்வுப் பணிப்பாளர் வெலிவ குணசேகர, பிரதிப் பணிப்பாளர் லயனல் குண திலக ஆகியோரே அங்கு பயணமாகியுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொலை, கூட்டுப் படைத்தலைமையக குண்டு வெடிப்பு தொடர்பான விட யங்களையும் இருதரப்பினரும் ஆராய்வர். (சே)

## இம்மாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி அமைச்சு சகல திணைக்களங்களுக்கும் அறி வித்துள்ளது.

மூவாயிரம் ரூபாவுக்கு குறைவாக சம்பளம் பெறும் சகல அரச, உள்ளூராட்சி சேவையிலுள்ள உத்தியோகத் தர்களும் ஓய்வூதியம் பெறுவோ ருக்கும் இந்த சம்பள உயர்வு இம்மாதம் கிடைக்கவுள்ளது.

## ஜே. ஆர். அரசியலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி திரு. ஆர். பிரேம தாசா மனித உரிமைகளை மீறினார், அதிகார துஷ்பிர யோகங்களில் ஈடுபட்டார். என்று குற்றஞ்சாட்டி அவ ருக்கு எதிராக நாடாளுமன் றத்தில் குற்றவிசாரணைப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு முன்னாள் அமைச்சர்களான திரு. லலித் அத்துலத் முதலி, திரு. காமினி திஸாநாயக்க தலைமையில் ஐ. தே. க. எம் பிக்கள்குழு ஒன்று துணிந்து முன்வந்தது.

இந்தத் துணிகர முடிவு தென்பகுதியில் பெரும் அர சியல் கொந்தளிப்பையே ஏற் படுத்தியது. தென்பகுதி அரசியலில் பெரும் மாற்றத் தையும் இது ஏற்படுத்தியது.

பழுத்த அரசியல் வாதி யான திரு. ஜெயவர்த்தன இது குறித்து வெளிப்படையாக எந்தவிதமான கருத்துக்களை யும் தெரிவிக்காதபோதும், இந்த மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்து வந்தார்.

திரு. ஜெயவர்த்தன இது சம்பந்தமாக எழுந்த இந்த விவாதத்தில் நேரடியாகப் பங்குபற்றாத போதிலும் ஒதுங்கி நின்றபடியே அரசியல் களத்தில் நடப்பவற்றை அக் கறையோடு கவனித்துக் கொண்டு வந்தார்.

இப்போதைய அமைப்பில் சீர்செய்யப்பட வேண்டிய குறைபாடுகள் சில இருக்கத் தான் செய்கின்றன. இந்த அமைப்பை முற்றாக நிராக ரித்து நாங்கள் முன்பு கைவிட்ட ஒன்றை மீண்டும் கொண்டுவர முயற்சிசெய்வது எம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னையைத் தீர்க்கமாட்டா தென்று ஜெயவர்த்தன தெரி வித்துள்ளார்.

## ரூ. 5000 பறி கொடுத்த

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டது மட்டுமல்ல தனது சில்லறைப் பையினுள் இருந்த பணத்தை உடனே எடுத்து அப்பெண்ணிடம் கொடுத்தா ராம். பணம் கிடைத்ததே போதும் என்ற பூரிப்புடன் அந்தப்பெண் அங்கிருந்து புறப்பட்டு ஓமந்தைப் பகுதிக்கு வந்து சேர்ந்த பின்பே, இராணுவ சிப்பாய் கொடுத்த பணத்தை எண்ணிப்பார்த்த போதுமொத்தம் 15 ஆயிரத்து 50 ரூபா இருப்பதைக் கண்டு திகைப்பு அடைந்ததுடன் சந் தோசமும் அடைந்தாராம். (வி)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerd as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.